


- வாழ்வோம்

'நடிகர்களின் அரசியல்' நடுநிலையாளர்கள் ஆதரிப்பது ஏன்?


நடிகர்கள் அரசியலுக்கு வருவதை ஊடகவியலாளர்கள், நடுநிலையாளர்கள் துள்ளிக் குதித்து ஆதரிப்பது ஏன்? என முகநூலில் கேள்வி எழுப்பி, அதற்குப் பதிலும் அளித்துள்ளார், ஆவணப்பட இயக்குநர் ஆர்.பி.அமுதன். அவரது பதிவி லிருந்து...

``இவர்கள் எல்லோரும், தமிழ்நாட்டில் பரவலாகப் பேசப்படும் முற்போக்கு அரசியலை எதிர்ப்பவர்கள். அதற்குக் காரணம், `இவர்களிடம் இருக்கும் தாழ்வு மனப்பான்மை', `பார்ப்பனர்மீது இருக்கும் அபிமானம்', `சாதி கொடுக்கும் தகுதிக்கு மீறிய அறமற்ற மதிப்பும் மரியாதையும்', `கோழை களுக்கும் சோம்பேறி களுக்கும் மோசடிப் பேர்வழிகளுக்கும் சாதி அடையாளம் கொடுக்கும் பாது காப்பு உணர்வு' ஆகியவையேயாகும்.

இவர்களுக்கு, `பகுத்தறிவின் பின்னால் இருக்கும் கடவுள் மறுப்பு அல்லது பார்ப்பன எதிர்ப்பு', `இடஒதுக்கீட்டுக்குப் பின்னால் இருக்கும் பார்ப்பனர் அல்லாதோருக்குக் காட்டப்படும் முன்னுரிமை', `பெண் விடுதலை', `மதச்சார்பின்மையின் பின்னால் இருக்கும் சிறுபான்மையினர் மீதான அக்கறை' ஆகிய முன்னெடுப்புகள் மேல் இருக்கும் ஒவ்வாமைதான், இப்படி எல்லா கூத்தாடிகளின் பின்னாலும் ஓடவைக்கிறது.

கூத்தாடிகள் மட்டுமின்றி, யார் வந்து புதிதாய் கடை திறந்தாலும், அது அவர்களை உற்சாகப்படுத்தும். இந்த எதிர்மறை மனநிலைதான் எந்த ஊழலுக்கும் சதிக்கும், சமரசத்திற்கும் கொண்டு செல்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

பெரியோர்களின் பெரியார்!



கௌதம் ராஜ்

படிப்பறை 137

சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

சில தலைவர்களைப் பற்றி எவ்வளவு எழுதப்பட்டிருந்தாலும், அது போதாது என்ற உணர்வையே அளிக்கும். சமகாலத்திலும் அத்தகைய மதிப்புடன் திகழ்பவர், தந்தை பெரியார். 1949-ஆம் ஆண்டு தந்தை பெரியாரின் 70-வது வயதில், புதுவையில் இருந்து செயல்பட்ட 'ஞாயிறு நூற்பதிப்பக' உரிமையாளர் ச.சிவப்பிரகாசம் அவர்களின் சீரிய முயற்சியில் வெளியான தொகுப்பு, 'பெரியார் இராமசாமி: அறிஞர் பலரின் கருத்துரைத் தொகுப்பு நூல்'. 200 பக்க அளவில் அந்தக் காலத்தில் தமிழ்நாட்டின் முக்கிய தலைவர்கள் அனைவரிடத்திலும் இருந்து பெறப்பட்ட கருத்துகளையும் கட்டுரைகளையும் சுமந்து வெளியாகி இருக்கிறது இந்நூல். தமிழ் மின் நூலகத்தில் படிக்கக் கிடைக்கிறது.

பெரியார் குறித்து, "அவருக்கும் எனக்கும் உள்ள அக நகும் நட்பு, யார் என்ன சொன்ன போதிலும் என்றும் குறையாது" என்கிறார், அன்றைக்கு இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜகோபாலாச்சாரி. கருத்து வேற்றுமைக்கு மதிப்பளித்தவர் பெரியார் என்பதைச் சுட்டிக்காட்டி, ..."தனக்கென வாழா பிறர்க்குரியாளன்" இது பெரியாருக்குத் தான் பொருந்தும் என்றும் பாராட்டி இருக்கிறார், திரு.வி.க.

"அவரைப்பற்றி ஐரோப்பாவிலே உள்ள பார்லிமென்டில் பேசப்படுகிறது என்றால். பெரியாரின் புகழைப்பற்றி நான் என்ன சொல்வது" என்று வியந்துள்ளார், பெரியவர் வ.உ.சி. அவர்கள். 'தமிழ்நாட்டின் ரூசோ என்றும், தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் ஆகும் உரிமை கொண்டவர்' என்றும், 'சுதந்தரத் திராவிடத் தனியரசுக்குப் பெரியார் இராமசாமியவர்கள், பெரும் போராட்டம் நடத்திவருகிறார்' என்றும் பக்கங்களைப் புரட்டப் புரட்ட பெரியார் பற்றி அன்றைய முக்கிய தலைவர்கள் கொண்டிருந்த வியப்பூட்டும் கருத்துகள் நமக்குக் காணக் கிடைக்கின்றன.

'திராவிடத் தந்தை' பெரியார் ஈ.வெ. இராமசாமி என்ற பெயருடன் கால் மேல் கால் போட்டுக் கொண்டு காட்சியளிக்கும் பெரியாரின் புகைப்படமும், அவரது 70 ஆண்டுக் கால வாழ்க்கைக் குறிப்பும், ஒன்பது முறை அவர் சிறை சென்றது பற்றிய குறிப்புகளும், 'நான் யார்?' என்ற தலைப்பில் 'விடுதலை' இதழில், பெரியாரால் எழுதப்பட்ட கட்டுரையில் இருந்து சிறு பகுதியும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

அனைத்துக்கும் முத்தாய்ப்பாக, பேரறிஞர் அண்ணா பெரியார் குறித்து எழுதி இருக்கும் கட்டுரையில், "சாக்ரடீஸ், லெனின், பிராட்லா, பெர்னாட்ஷா, ரூசோ முதலிய பேரறிஞர்களும் புரட்சிக்காரர்களும் எதற்காக உலகிலே போற்றப்படுகிறார்களோ, அவர்கள் வழி நிற்க எண்ணுகிறதோ, அவ்வளவையும் ஒருங்கே திரட்டி ஒருருவில் பார்க்க வேண்டுமானால், அது பெரியார்தான்!" என்ற பகுதி பெரியாரின் சித்திரத்தை மிகத் துல்லியமாகப் பதிவு செய்கிறது.

பெரியாரைத் தூற்றும் சிறுமதி கொண்டவர்கள், காலந்தோறும் இருந்துள்ளார்கள். ஆனால், பெரிய மனிதர்கள் அனைவரும் அரசியலுக்கு அப்பாற்பட்டு, பெரியாரை மிக உயரிய இடத்தில் வைத்துப் போற்றியுள்ளதைத்தான் இந்தத் தொகுப்பில் உள்ள கட்டுரைகள் நமக்கு உணர்த்துகின்றன.

...வாசிப்போம்.

சீர் செய்யும் திராவிட சித்தாந்தம்!



எஸ்.கார்த்திகேயன், காஞ்சிபுரம்.

'நாயக முதலமைச்சர்' தோற்றால்தான் அவரது திரைப்பிம்பம் உடையும். அடுத்து வரும் இடைத்தேர்தல்களில், தி.மு.க. - அ.தி.மு.க. ஏன் ஒன்றாக இணைந்து தேர்தலைச் சந்திக்கக்கூடாது?

அ.தி.மு.க. என்பதே நாயக பிம்பத்தில் உருவான கட்சிதான். தற்போதைய தலைமுறை காண்கின்ற பிம்பச் சீரழிவுக் கலாச்சாரம் அனைத்திற்கும் தொடக்கப் புள்ளி அ.தி.மு.க.வே. தி.மு.க. எதிர்ப்பு-கலைஞர் வெறுப்பு என்பதையே 55 ஆண்டுக்கால அ.தி.மு.க., தனது கொள்கையாக முன்னெடுத்திருக்கிறது. இவை அ.தி.மு.க.வினரின் ரத்தத்தில் ஊறிப்போய்விட்டன. அதனால், தி.மு.க.வுக்கு அ.தி.மு.க.வின் வாக்குகள் எந்த அளவு ஆதரவாகத் திரும்பும் என்பதற்கு ஆதாரபூர்வமான தரவுகள் இதுவரை இல்லை. மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலில், தி.மு.க. தன்னுடைய வாக்கு வங்கியைத் தக்க வைத்த நிலையில், த.வெ.க. வெற்றிக்கு உதவியவை அ.தி.மு.க.வின் வாக்கு வங்கிதான். வழக்கமான அ.தி.மு.க. வாக்குகளில் 15% விஜய் கட்சிக்குத் திரும்பியதால்தான் அவர்களால் வெற்றிபெற முடிந்தது. தங்கள் கட்சி கரைந்துபோகிறது என்பதைக் கூட உணராமல், அ.தி.மு.க. வாக்காளர்கள் இருக்கிறார்கள். அதன் நிர்வாகிகள் கட்சி தாவிவிடுகிறார்கள். அ.தி.மு.க.வினரின் மனதில், உண்மையான திராவிட இயக்கம் பற்றிய புரிதலும், இயல்பாக ஏற்படும் மாற்றங்களுமே தேர்தல் களத்தில் தி.மு.க.வுக்கு ஆதரவாக அமையும். அவர்கள் எதிர்கொண்டுவரும் மோசமான நிலைமைகளால், அதற்கான காலம் அமையலாம்.

மு.சந்தோஷ்குமார் சென்னை

தி.மு.க. அரசு சாதனைகளை மட்டும் போகிறபோக்கில் பலர் கடந்துபோவது ஏன்? அங்கீகரிக்க மறுப்பது ஏன்?

தி.மு.க. அரசின் சாதனைகள், சட்டத் திருத்தங்கள் வழியே உருவான சமூக மாற்றங்கள். 'தமிழ்நாடு அரசு இந்து திருமணத் திருத்தச் சட்டம்' என்பதுதான் 'அண்ணாவின் சுயமரியாதைத் திருமணச் சட்டம்'. இதன் மூலம், ஆரியப் பண்பாட்டிற்கு மாற்றான தொல்தமிழ்ப் பண்பாட்டு அடிப்படையிலான காலத்திற்கேற்ற சீர்திருத்தத் திருமணங்கள் சட்ட அங்கீகாரம் பெற்றன. 'குடும்பச் சொத்தில் பெண்களுக்கு சம உரிமை அளிக்கும் சட்டம்', இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாமல் இருந்த காலத்திலேயே தமிழ்நாட்டில் நிலைநாட்டப்பட்டது. 'முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கான திட்டங்கள்', 'பொது நுழைவுத் தேர்வு ரத்துச் சட்டம்' மூலம் ஒவ்வொரு குடும்பத்திலும் டாக்டர்கள்-இன்ஜினீயர்கள், தமிழ்நாட்டின் தலைநகர் முதல் கடைக்கோடி கிராமம் வரை சீரான உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை தி.மு.க. அரசின் சாதனைகள், சமூகத்தில் காலங்காலமாக நிலவிய ஏற்றத்தாழ்வுகளை நீக்கி, சமநிலையை உருவாக்கின. எல்லாவற்றுக்கும் மேலாக, எல்லாச் சாதியினரும் ஒரே இடத்தில் வாழும் சமத்துவபுரங்கள் மகத்தான சாதனை. மனதிலும் வாழ்விலும் ஆதிக்க எண்ணம் கொண்டவர்கள் தி.மு.க.வின் சாதனையை அங்கீகரிப்பார்களா என்ன?

த.புவியரசி, குடியாத்தம்.

வெறும் நான்கே மாதங்களில் சீர்கெட்டுப்போன தமிழ்நாட்டை, மீண்டும் எப்படியாவது சீரமைத்திட, 'திராவிட சித்தாந்தம்' உதவி புரியுமா?

இளைய தலைமுறையினரிடம் தொடர்ந்து உரையாட வேண்டும். கழகத் தலைவர் சொன்னது போல, 'எல்லாருக்கும் எல்லாம்' என்பதுதான் திராவிடச் சித்தாந்தம் என்ற எளிமையான அறிமுகத்துடன், அவர்களிடம் பேச வேண்டும். 'திராவிட மாடல் ஆட்சியில், கடந்த ஆண்டு இதே மாதத்தில் தமிழ்நாடு எப்படி இருந்தது, இந்த ஆண்டு இதே மாதத்தில் எப்படித் தேய்ந்திருக்கிறது' என்பதைப் பேச்சாக மட்டுமல்ல, படங்களாக-காணொலிகளாக விளக்க வேண்டும். திராவிட இயக்கம் தமிழ்நாட்டை வளர்த்தெடுத்ததையும் அதில் அவர்கள் அடைந்த பலன்களையும் எளிய உதாரணங்களுடன் மனதில் பதியச் செய்ய வேண்டும். வேலை கடினமானது. விளைவு நல்லதாகவே அமையும்.

(திராவிடன் பதில்கள் பகுதிக்கு உடன்பிறப்புகள், வாசகர்கள் தங்கள் கேள்விகளை அனுப்பலாம். வாட்ஸ்ஆப் எண் - 82204-51520)

திராவிடன் பதில்கள் 06

ஃப்ளாஷ்பேக்



ஏ.கிளாட்வின்



வாழ்வில் கிடைத்த பொன்னாள்!

2014-ஆம் ஆண்டு, தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்து, எடுத்துக்கொண்ட புகைப்படம். தலைவரைச் சந்திக்க வேண்டும் என எனது விருப்பத்தை, எங்கள் மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான அண்ணன் ஆர்.காந்தி அவர்களிடம் தெரிவித்தேன். நான் கேட்ட மறுநாளே, என்னை அழைத்துக்கொண்டு அண்ணா அறிவாலயத்திற்குச் சென்றார், தளபதி அவர்களிடம்."எனது நண்பர் ஆரி அவர்களின் மகன், குவைத்திலிருந்து வந்திருக்கிறார்" என்று தலைவர் அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்திய அந்தத் தருணம், என் வாழ்வில் என்றும் மறக்க முடியாது.

- இராணிப்பேட்டை ஏ.கிளாட்வின், ஒருங்கிணைப்பாளர், குவைத் தி.மு.க. தளபதிப் பேரவை, குவைத்.மாவட்ட இளைஞர் அணித் துணை அமைப்பாளர், கெம்மங்குப்பம், கே.வி.குப்பம் ஒன்றியம், வேலூர் வடக்கு.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900